இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024



# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 112 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 16 – செவ்வாய்க்கிழமை 02 டிசம்பர் 2025 – சென்னை 12 + 32 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 112: Thiruvalluvar Year - 2056 - Karthigai 16 - Tuesday 02 December 2025 - Chennai 12+32 Pages ₹ 5.00


## ‘டித்வா’ புயலால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக

# மாநில பேரிடர் நிதியிலிருந்து இழப்பீடு வழங்குக!

## ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு உத்தரவு!

சென்னை, டிச. 2 -

**டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது பயிர் பாதிப்புக்கு உரிய நிவாரணம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (1.12.2025) தலைமைச் செயலகத்தில், டித்வா புயல் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் பயிர்சேதங்கள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

டித்வா புயல் நேற்று பின்னிரவு ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலு குறைந்து சென்னைக்கு தென்கிழக்கே 90 கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டுள்ளது. தொடர்ந்து இன்று மாலைக்குள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலு குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக இன்று சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டித்வா புயல் காரணமாக மாநிலத்தில் 27.11.2025லிருந்து 01.12.2025 வரை நாகப்பட்டினம் (22.2 செ.மீ), மயிலாடுதுறை (13.2 செ.மீ), திருவாரூர் (10.2 செ.மீ), இராமநாதபுரம் (8.7 செ.மீ). தஞ்சாவூர் (8.6 செ.மீ) ஆகிய மாவட்டங்களில் கனமழை முதல் அதி கனமழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

**பயிர்ச் சேதம் குறித்து ஆய்வு!**

பேரிடர் மற்றும் வடகிழக்கு பருவ மழை தொடர்பாக ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 27.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேலும், 28.11.2025 அன்று சென்னை, எழிலகத்திலுள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, டித்வா புயல் காரணமாக அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம் உள்ளிட்ட 14 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக்காட்சி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, நேற்று முதலமைச்சர் அவர்கள் தலைமையில், வடகிழக்கு பருவமழையால், குறிப்பாக டித்வா புயல் காரணமாக டெல்டா மாவட்டங்களில் பெய்துள்ள கனமழை மற்றும் பிற மாவட்டங்களில் பரவலாக மழையும் பெய்து வருவதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் பயிர்சேதம் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தற்போது பெய்துவரும் மழையினால், வேளாண் பயிர்கள் குறிப்பாக நெற்பயிர் சேதம், இதர பயிர்கள் சேதம் குறித்தும், தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் குறித்தும் கணக்கெடுப்பு பணிகளை தொடங்கி, அதுதொடர்பாக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

**முகாம்களில் உள்ளவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்திடுவீர்!**

மேலும், கனமழையினால் பாதிக்கப்பட்ட இடங்களில் தேங்கியுள்ள வெள்ள நீர் வடிவதற்கான அனைத்துப் பணிகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், 2025 அக்டோபர், மாதம் பெய்த மழையினால் ஏற்பட்ட பயிர் பாதிப்புகளுக்கான கணக்கெடுப்புப் பணிகள் முடிவடைந்து 33 சதவிகிதத்திற்கும் மேல் பாதிக்கப்பட்ட 4,235 எக்டர் வேளாண் பயிர்களுக்கும், 345 எக்டர் தோட்டக்கலைப் பயிர்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உரிய நிவாரணம் வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

டித்வா புயல் காரணமாக குடிசை வீடுகள் மற்றும் இதர வீடுகளின் சேதங்கள், மனித உயிரிழப்புகள், கால்நடை உயிரிழப்புகள் போன்றவற்றிற்கு இழப்பீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைந்து வழங்கிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

கனமழை காரணமாக பல்வேறு மாவட்டங்களில் 39 நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான குடிநீர், உணவு, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும் என்றும், இப்பணிகளை தேவைப்படும் காலம் வரை தொடர்ந்து செய்துதர வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (1.12.2025) தலைமைச் செயலகத்தில், டித்வா புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரணப் பணிகள் குறித்தும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் குமரவேல் பாண்டியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### அரசியலில் இருந்து விலகி ஓய்வெடுக்க

## புது வீட்டில் குடியேறினார் லாலு!



பாட்னா, டிச. 2 -

ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சியின் தலைவராக இருந்த லாலு பிரசாத் யாதவ், புது வீட்டில் குடியேறியுள்ளார்.

லாலு பிரசாத் யாதவின் உடல் நிலை சமீபகாலமாக ஆரோக்கியமாக இல்லாததால், அவர் பொது இடங்களுக்கு செல்வதில்லை. இந்நிலையில் பிஹாரில் சமீபத்தில் நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தலிலும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சி பின்னடைவை சந்தித்தது.

இந்நிலையில் லாலு பிரசாத் யாதவ் புது வீட்டில் குடியேறியுள்ளார். அங்கு மற்றவர்கள் எளிதில் செல்ல முடியாதபடி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. லாலு பிரசாத் யாதவின் ஆரோக்கியத்தில் மட்டுமே அங்கு தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. இது வெறும் வீடு மாற்றம் மட்டும் அல்ல, பிஹார் அரசியலில் நடைபெற்றுள்ள முக்கியமான மாற்றத்தின் அடையாளமாக பார்க்கப்படுகிறது. இனி ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சி சம்பந்தமான முடிவுகள் அனைத்தையும் தேஜஸ்வி யாதவ் மட்டுமே எடுப்பார் எனத் தெரிகிறது.

---

## வலுவிழந்த ‘டித்வா’ புயல்!

சென்னை, டிச. 2 -

வானிலை ஆர்வலர் பிரதீப் ஜான், தனது சமூகவலைதளப் பக்கத்தில் கூறியிருப்பதாவது: காற்றழுத்த தாழ்வு மண்டலம் (ex Ditwah) சென்னைக்கு அருகே நிலை கொண்டுள்ளது. இது மேலும் 2 நாட்கள் சென்னை கடல்பரப்பை ஒட்டியே நிலவும். இதனால் அடுத்த 2 நாட்கள் மழை நீடிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கத்தால் தமிழகத்தின் உள் மாவட்டங்களிலும், கடலோர மாவட்டங்களிலும் மழை பெய்யும். நீலகிரி, கோவை, ஈரோடு, டெல்டா மாவட்டங்கள், மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

---

### சென்னை கிண்டியில் மழைநீரை சேகரிக்கும் குளங்கள் –

## சுற்றுச் சூழல் பூங்கா அமைக்க அனுமதி!

### சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, டிச. 2 -

சென்னை கிண்டியில் உள்ள ரேஸ் கிளப் நிலத்தில், மழை நீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பூங்கா அமைக்க அனுமதி அளித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை கிண்டியில் ரேஸ் கிளப்பிற்கு வழங்கப்பட்ட நிலத்துக்கான குத்தகையை ரத்து செய்த தமிழ்நாடு அரசு, மீட்கப்பட்ட இடத்தில் 118 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைத் துறை சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக பசுமைவெளிப் பூங்கா மற்றும் மாநகராட்சி சார்பில் மழை நீரை சேமிக்க நான்கு குளங்கள் என மழைநீர் சேகரிப்பு திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதனை எதிர்த்தும், குத்தகையை ரத்து செய்து, நிலத்தை அரசு கையகப்படுத்தியதை எதிர்த்தும் ரேஸ் கிளப் நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, இவ்விவகாரத்தில் தற்போதைய நிலையே நீடிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்தது. மேல்முறையீட்டு மனு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம் மற்றும் முகமது ஷபிக் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது..

சென்னை வெள்ளத் தடுப்பு நடவடிக்கையாக, மக்களின் நலன் கருதி, கிண்டி ரேஸ் கிளப் இடத்தில் மழை நீரை சேகரிக்கும் வகையில் குளங்கள் அமைக்கவும், சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கவும் அனுமதி அளித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

---

### SIR–க்கு எதிர்ப்புத் தெரிவித்து

# மக்களவையில் எதிர்க்கட்சிகள் முழக்கம்!

## அவை ஒத்திவைப்பு!

புதுடெல்லி, டிச. 2 -

**பரபரப்பான சூழலில் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. S.I.R.க்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சிகள் முழக்கங்களை எழுப்பியதால் மக்களவை 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.**

கடந்த மழைக்கால கூட்டத்தொடர் முற்றிலும் முடங்கிய நிலையில், நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. டிசம்பர் 19ம் தேதி வரை நடைபெறும் இக்கூட்டத் தொடரில் 15 அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. கடந்த கூட்டத் தொடரில் நிறைவேறாத, நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் சில முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் குளிர்காலக் கூட்டத்தொடர் நேற்று காலை 11 மணிக்கு தொடங்கியது. மக்களவையில் எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தன. நெல்லின் ஈரப்பதத்தை 22 % ஆக உயர்த்த வேண்டும், 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்துக்கான ஆயிரத்து 290 கோடி ரூபாய் நிலுவை தொகையை விடுவிப்பது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து, அவையை ஒத்திவைத்து விவாதிக்க வலியுறுத்தி மக்களவையில் திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது.

தேர்தல் சீர்திருத்தம் குறித்து விவாதிப்பதற்காக, நாடாளுன்ற தி.மு.க. குழு தலைவர் கனிமொழி கருணாநிதி ஒத்தி வைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுத்திருந்தார். எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை அவைத் தலைவர் ஏற்க மறுத்ததால், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கத்தில் ஈடுபட்டனர். இதனால், 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்ட அவை, பின்னர் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக, நாடாளுமன்ற இந்தியா கூட்டணிக் கட்சிகள் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ராகுல் காந்தி, தி.மு.க. சார்பில் மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர். நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய மக்கள் பிரச்சினைகள் மற்றும் அணுகுமுறைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது

---

### தூத்துக்குடி ஆலையில்

## மின்சார பேருந்துகளை தயாரிக்க திட்டம்!

சென்னை , டிச. 2 -

மின்சார வாகன தயாரிப்பு நிறுவனமான வின்ஃபாஸ்ட் மின்சார பேருந்து உற்பத்தியில் களம் இறங்குகிறது. அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் தூத்துக்குடியில் உள்ள ஆலையில் மின்சார பேருந்துகளை தயாரிக்க உள்ளது. தூத்துக்குடியில் ரூ.16,000 கோடியில் வின்ஃபாஸ்ட் நிறுவனத்தின் மின்சார கார் உற்பத்திதொழிற்சாலையை முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த ஆகஸ்ட் மாதம் திறந்து வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

இதுவரை தூத்துக்குடி வின்ஃபாஸ்ட் ஆலையில் மின்சார கார்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்த நிலையில், மின்சார பேருந்து உற்பத்தியில் வின்ஃபாஸ்ட் நிறுவனம் களம் இறங்குகிறது.